**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு – 2015**

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்பட்டனவா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01

---

(i) கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடும்போது அட்டுறு அடிப்படையில் அவை கணக்கீடு செய்யப்பட வேண்டுமெனினும், மாவட்ட அலுவலகங்களில் பெறப்படும் வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் என்பன நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாகக் காட்டப்பட வேண்டுமாயினும், காணி விற்பனையால் பெறப்பட்ட மொத்த வருமானமாகிய ரூபா 213,499,139 தொகை நிதிச் செயலாற்றல் அறிக்கையிலும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய பகுதி ஒதுக்கத்தின் கீழும் காட்டப்படுவதற்குப் பதிலாக அதில் 60 சதவீதமான ரூபா 128,099,483 வருமானத்தின் கீழும் எஞ்சிய 40 சதவீதமான ரூபா 85,399,656 ஒதுக்கத்தின் கீழும் காட்டப்பட்டிருந்தன. அதற்கமைய, பெறப்பட்ட வருமானத்தின் உண்மையான தன்மை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

---

கடந்த சில ஆண்டுகளுக்குரிய குத்தகைக் காணிகளிலிருந்து பெறப்பட்ட மற்றும் 1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை அடங்கலான ஏனைய படிகள் என்பன மீளளிக்கப்பட்டதன் மூலம் பெறப்பட்ட வருமானமாகிய ரூபா 13,666,001 முன்னோக்கி சீராக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டின்போது முன்னைய ஆண்டின் சீராக்கங்களாக ஆண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08

---

காணி ஒன்றினது உரித்தைப் பெறுவதற்காக ஆணைக்குழுவிற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் முறைப்பாட்டாளருக்கு ரூபா 148,715,363 வழங்குமாறு 2009 ஆம் ஆண்டின்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதற்குரிய வட்டியுடன் கூடிய செலுத்த வேண்டிய தொகை ரூபா 200,000,000 இனை விஞ்சியிருந்த போதிலும் அதற்கு தேவையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவனம் ஒன்றினால் மீள விற்பனை செய்யப்படுவதற்காக வைத்திருந்த காணியும் சொத்துக்களும் கையிருப்பாகக் காட்டப்பட வேண்டியபோதும், விற்பனைக்காக இருந்த ரூபா 676,169,345 பெறுமதியான காணி நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட காணி முதற் தடவையாக 1978 ஆம் ஆண்டில் விற்பனைக்கென மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சிறிய சீராக்கங்களைத் தவிர, 2006 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஒரே பெறுமதியே காட்டப்பட்டிருந்தது. இதற்கமைய, ஆண்டுதோறும் நடைபெறும் கைப்பற்றல்கள், விற்பனை போன்ற சீராக்கங்களின் பின்னர் மேற்கொண்டும் மீள மதிப்பீடு தேவைப்படுமாயின் அதற்கும் சீராக்கல் செய்யப்படாமை காரணமாக, இம் மீதிகள் சரியான பெறுமதியை நிரூபணமாக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான குத்தகை வாடகைக் கொடுப்பனவு தாமதமாகியதால் அறவிட வேண்டிய மிகைக் கட்டணம் ரூபா 3,602,498 குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழு குத்தகைக்கு வழங்கியிருந்த கனிப்பொருள் வளங்களிலிருந்து (கருங்கற்களிலிருந்து) அறவிடப்பட வேண்டிய வருமான நிலுவை தொடர்பாகக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாததுடன், களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் அறவிடப்பட வேண்டியிருந்த கருங்கற்களது வருமான நிலுவை ரூபா 20,152,185 ஆகும்.

(இ) சேவைக்காலம் 1 முதல் 5 ஆண்டுகளாக உள்ள 7 உழியர்களுக்கான பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 228,745 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 1 ஆம் மற்றும் 2 ஆம் கட்ட இழப்பீட்டு நிச்சயமின்மையின் கீழ் ரூபா 223,012,958 ஒட்டுமொத்தப் பொறுப்பு நிலவியபோதும், மதிப்பீடு மற்றும் இழப்பீட்டுப் பிரிவினது அறிக்கைப் பிரகாரம் வெளியீட்டாளர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய வட்டியுடனான இழப்பீடு ரூபா 586,300,000 ஆகும். அதற்கமைய, ரூபா 363,287,042 வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் இது சரியானதா என்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கிய 11 வருமானத் தலைப்புக்களது வருமானத்தை அதனோடு தொடர்புடைய வருமான அறிக்கைகளுடன் ஒப்பிடும்போது ரூபா 17,891,944 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) வருமானப் பிரிவினது அறிக்கையின்படி மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான பெற வேண்டிய குத்தகை வாடகை வருமானம் ரூபா 171,128,621 ஆகும். எனினும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 87,915,051 ஆகக் காட்டப்பட்டமையால் குத்தகை வாடகை வருமானத்தில் ரூபா 83,213,570 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பத்து ஆண்டுகளுக்கு மேலாக 7 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டியதாகவிருந்த ரூபா 2,132,372,712, ஓராண்டு முதல் 5 ஆண்டுகளாக 46 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடனான ரூபா 748,589 மற்றும் 2 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை வாடகையாகிய ரூபா 87,915,051 ஆகியவற்றை அறவிடுவதற்கோ அல்லது அவற்றைக் கணக்குகளில் தீர்ப்பதற்கே பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மீளாய்வாண்டிலும் தவறியிருந்தது.

(ஆ) காணி அமைச்சினால் மீளளிப்புச் செய்யப்படும் அடிப்படையில் தலைவரின் அங்கீகாரத்துடன் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ரத்னபூமி உரித்துறுதியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் விளம்பர நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கென தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 2003 ஆம் ஆண்டின் போது ரூபா 3,252,654 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 12 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில்

அறவிடப்பட வேண்டியனவாகக் காட்டப்படும் இத்தொகை தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டிலும் ஆணைக்குழு தவறியிருந்தது.

(இ) 1999 ஆம் ஆண்டு முதல் 15 நானாவித கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,921,575 தொகை மீளாய்வாண்டிலும் அறவிடப்படாததுடன் அப் பெறுமதியை உறுதி செய்வதற்கான மூல ஆவனங்கள் ஆணைக்குழுவிடம் இருக்கவில்லை.

(ஈ) நிதிசார் கூற்றுக்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்படும் காணி விற்பனை முற்பணமாகிய ரூபா 6,424,700, எட்டு ஆண்டுகளுக்கு மேலாக நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ஊழியர்களுக்குக் காணிகளை விற்பனை செய்வதற்கான முற்பணமாகிய ரூபா 3,923,492, பத்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த குத்தகை வாடகை முற்பணமாகிய ரூபா 11,215,850 மற்றும் 4 ஆண்டுகளாக நிலவி வரும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியாகிய ரூபா 2,500,000 என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது அவற்றை வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) திருப்பிச் செலுத்த வேண்டியனவாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கேள்வி வைப்புகளின் பெறுமதி ரூபா 201,500 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 66,000 இரண்டு முதல் 10 ஆண்டுகளானவையாகும். எஞ்சிய மீதியாகிய ரூபா 135,500 பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முன்கொண்டவரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த வைப்பாகிய ரூபா 800,130 இனை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணி | 676,169,345 | காணிகள் தொடர்பான விபரமடங்கிய பதிவேடுகள்/பட்டோலை |
| கட்டிடம் | 4,586,223 | மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் | 7,771,227 | |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 857,543 | |
| மோட்டார் வாகனங்கள் | 68,571,828 | |
| அலுவலக உபகரணங்கள் | 20,977,190 | |
| நலனோம்பல் உபகரணங்கள் | 1,031,996 | |
| எழுது கருவி கையிருப்பு | 2,711,069 | |
| இழப்பீட்டுத் தொங்கற் கணக்கு | 223,012,958 | விரிவான பட்டோலை |

**2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2014 திசெம்பர் 18 ஆந் திகதிய 12/1237/501/030 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | 2002 சனவரி 01 முதல் 2004 மார்ச் 31 வரையான காலப்பகுதியின்போது ஆணைக்குழு சுவீகரித்த காணிகள் தொடர்பாக அமைச்சரவை சமர்ப்பித்த விடயங்களை உள்ளடக்கிய விரிவானதோர் அறிக்கையை 2 மாதத்திற்குள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக பெயரிடப்பட்டிருந்த 4 பேரை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அது இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) 2004 ஜீலை 29 ஆந் திகதிய 25 ஆம் இலக்க மற்றும் 2004 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 25(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) நிதி அமைச்சரது அங்கீகாரமின்றி நிறுவனத்தால் 2004 முதல் நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் ரூபா 1,228,664,542 முதலீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>(ii) நிதி அமைச்சின் அங்கீகாரமின்றி தனியார் கம்பனி ஒன்றில் 2010 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 7,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பிரிவு | சகல அரசாங்க முயற்சிகளும் தமது நிறுவனச் செயற்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்குமான தீர்மானத்தை மேற்கொள்வதற்கும் அவற்றைச் செயற்படுத்துவதற்கும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுக்களை நிறுவ வேண்டிய போதும், ஆணைக்குழு இம் முகாமைத்துவக் குழுக்களை நியமித்திருக்கவில்லை. |
| (ஈ) 2000 திசெம்பர் 08 ஆந் திகதிய 2000/26 ஆம் இலக்கப் பயன்படுத்தல் கட்டணத்தை அறவிடுவது சம்பந்தமான உள்ளகச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | அனுமதியின்றிக் காணிகளைப் பயன்படுத்துபவர்களது பெயர்ப்பட்டியலொன்று மாவட்ட அலுவலகத்தால் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அதன் பிரதி ஒன்று பணிப்பாளருக்கு (நிர்வாகம்) அனுப்பி வைக்கப்படவும் வேண்டுமாயினும் அவ்வாறு நடைபெறவில்லை. |
| (உ) 2008 ஏப்ரல் 17 ஆந் திகதிய 2008/பொது/1 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை | |
| (i) 1(i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள் | குறித்தவொரு ஆண்டினது நிலுவையாகவுள்ள பயன்பாட்டுக் கட்டணம் அவ்வாண்டிலேயே அறவிடப்பட்டு முடிவுக்கு வர வேண்டுமாயினும், அநேக சந்தர்ப்பங்களில் காணி விற்பனையின் போது பயன்படுத்தல் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ii) 2 ஆம் பிரிவு | 2001 ஒக்டோபர் 10 ஆந் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறிப் பயன்பெறுவோர் மற்றும் குடியிருப்போரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பயன்பாட்டுப் பணம் தாமதமின்றி அறவிடப்பட்டு முடிவுக்கு வர வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததெனினும் அவ்வாறு |

| | | |
|---|---|---|
| | | இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஊ) | 2007 செப்டெம்பர் 12 ஆந் திகதிய 2007/15 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை | நெடுங்காலமாக அத்து மீறிப் பயன்படுத்தப்படும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை அளவிட்டு அவற்றைப் பிரித்தன் பின்னர் மதிப்பீட்டை மேற்கொண்டு, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் உரித்துறுதியின் மூலம் அவற்றை வழங்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 2015 ஆம் ஆண்டளவிலும் அத்துமீறிப் பயன்படுத்தப்படும் அநேக காணிகள் இருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், ஆணைக்குழுவினது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 55,708,450 மிகை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 87,130,484 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் பெறுபேறுகளில் ரூபா 31,422,034 நலிவு காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், சராசரி சேமிப்பு வட்டி வருமானம் என்பன ரூபா 36,664,274 இனால் வீழ்ச்சியடைந்தமையே இந் நலிவுக்கான காரணமாகும்.

முன்னைய ஆண்டுகளது நிதிசார் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது 2011 முதல் 2015 வரை தொடர்ச்சியாக நிதி மிகையே நிலவியபோதும், 2012 ஆம் ஆண்டின் பின்னர் மிகையானது கிரமமாகக் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது. ஊழியர்களது ஊதியம், அரச வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களது பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளுமிடத்து ஆணைக்குழுவின் பங்களிப்பு 2011 முதல் 2015 வரை முறையே ரூபா 199,448,723, ரூபா 282,011,837, ரூபா 269,283,725 , ரூபா 284,277,810, ரூபா 269,448,792 ஆகும். அதற்கமைய, 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டின் பங்களிப்பிலான அதிகரிப்பு 41 சதவீதம் ஆக இருந்ததெனினும், அதன் பின்னரான ஆண்டுகளில் அம் மட்டத்தைப் பேணுவதற்கு இயலாது போயிருந்தது.

### 3.3 ஆணைக்குழுவுக்கு எதிராக அல்லது ஆணைக்குழுவால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கு எதிராகவும் ஆணைக்குழுவினாலும் 9 நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட 503 வழக்குகள் விசாரிக்கப்பட்டவாறிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவதொரு நபருக்குச் சொந்தமான அதி கூடிய அளவிலும் கூடிய கமத்தொழில் காணிகள், அந்த நபருக்குச் சொந்தமாகுதல், பாதுகாக்கப்படுதல், சுவீகரித்தல் மற்றும் அக்காணிகளில் உற்பத்தி மற்றும் அக் காணிகளில் ஏற்படும் தொழில்வாய்ப்புக்களின் அளவை அதிகரிக்கும் விளைவினை தரும் விதத்தில் அவற்றைப் பயன்படுத்துதல் என்பன ஆணைக்குழுவின் மூல நோக்கமாகும். ஆணைக்குழுவின் நோக்கத்தை நிறைவேற்றுதல் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆணைக்குழுவிடம் உள்ள அபிவிருத்திக்கான காணிகள் சம்பந்தமாக பதிவேடு ஒன்று இல்லாததால் சரியான தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. 2016 மார்ச் 26 ஆந் திகதிய பொது வியாபார முயற்சிகள் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆணைக்குழுவின் காணி விற்பனை மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டவற்றின் அளவு படிப்படியாக குறைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது நூற்றுக்கு 73 சதவீதம் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் இழப்பீடு வழங்குவதற்கு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட உரித்துஉறுதி செய்யப்படாத 106 கோவைகள் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தபோதும், மீளாய்வாண்டின் போதும் 2 கோவைகளுக்கு மாத்திரமே இழப்பீடு வழங்கப்படக் கூடியதாக இருந்தது. மேற்கொண்டு ஏறக்குறைய 550 கோவைகளுக்குரிய தகவல்கள் பெறப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) காலவிலவத்தை காணியில் 4 ஆம் துண்டில் பயன்பெற்றவாறிருந்த குத்தகையாளர் 2002 ஆம் ஆண்டின் சந்தைப் பெறுமதியில் அக்காணியைக் கொள்வனவு செய்வதற்கு இணங்கியிருக்கையில் அது தொடர்பாகப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் குறித்த நபர் 20 ஆண்டுகளுக்கு மேலாக குத்தகையைச் செலுத்தாது காணியின் நலனைப் பெற்றவாறிருந்தார்.

(ii) அதிகாரச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படாத காணியை மீண்டும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும், குத்தகையாளரால் தற்போது பயன்படுத்தப்படாதிருந்ததும் காணியில் எதுவித அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறாததுமான காலவிலவத்தை காணியின் 5 ஆம் மற்றும் 7 ஆம் பகுதிகளை மீண்டும் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) இக் காணியில் அத்துமீறிக் குடியேறியோர் போலியான உரித்துறுதியைத் தயாரித்து அதனை அனுபவித்து வருவதுடன் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ அல்லது 1975 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கத் திருத்த அதிகாரச் சட்டத்தின் 42(ஈ) இன் 1,2,3,4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அத்துமீறி வசிப்போரை அகற்றுவதற்கோ ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் உரித்து உறுதி செய்யப்பட்டுள்ள ஏதாவதுதொரு நபருக்கு வழங்கப்பட வேண்டிய ஏதாவதாரு இழப்பீடு அவரால் மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது அவர் மரணமடைந்துள்ள போது அல்லது அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு முடியாத சந்தர்ப்பமொன்றில் இழப்பீட்டிற்குரியவர் அதனைப் பெறுவதற்கு சிவில் நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றம் ஒன்றில் அதனை வைப்பு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், 127 கோவைகளுக்குரிய தொகையை நீதிமன்றங்களில் வைப்பிலிட கணக்காய்வுத் திகதியான 2016 ஏப்ரல் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இழப்பீட்டுத் தொங்கற் (II) கணக்குகளிலிருந்து இழப்பீடு செலுத்தப்பட வேண்டிய நபர்களைக் குறிப்பாக இனங்காண முடியாமையால் பல ஆண்டுகளாக இழப்பீடு

தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், ரூபா 109,959,493 மீதியானது பல ஆண்டுகளாகக் மாற்றமின்றி காணப்பட்டது.

**4.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

----------------------------------------------------------------------

பின்வரும் அலதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஏப்ரல் 02 ஆந் திகதிய 6873 ஆம் இலக்க ஆணைக்குழுப் பத்திரத்தின் பிரகாரம் ஸ்கந்த குமார கோவிலுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 04 ஏக்கர் 02 றூட் 05 பர்ச்சஸ் காணிக்கு 1978 ஆம் ஆண்டு முதல் மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியபோதும், 35 ஆண்டுகளுக்கும் மேலாக ஆணைக்குழுவிற்கு உரிய இக் காணிக்குக் எதுவித குத்தகைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவால் குத்தகை வழங்குதல் இரத்துச் செய்யப்பட்ட சில காணிகளில் அத்துமீறிக் குடியிருப்போரால் பயன்படுத்தப்பட்டுவருவதுடன் அக்காணிகள் மூலம் எதுவித வருமானமும் ஆணைக்குழுவிற்குக் கிடைக்காதிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------------------------------------

பின்வரும் அலதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெடுங்காலக் குத்தகை அடிப்படையில் நுகேதொலவத்தை காணியில் 4 ஏக்கர், 2 றூட், 16.96 பர்ச்சஸ் விளைச்சல் உள்ள பிரிவு ஒன்று 30 ஆண்டுகளாகக் குத்தகையின் அடிப்படையில் கலவைப் பயிர்ச்செய்கை மற்றும் பழத்தோட்டச் செய்கைகென வழங்கப்பட்டிருந்தது. எனினும், அங்கு கனவாகனப் பயிற்சி நிறுவனம் ஒன்று நடாத்தப்படுவதாகக் களப் பரிசோதனையின் மூலம் உறுதி செய்யப்பட்டது. அதற்கமைய, 2002 மே 23 ஆந் திகதிய உள்ளச் சுற்றிக்கை இலக்கம் 2/1/145(iii) இன் 13 ஆம் பிரிவுக்கமைய காணிகளை பெற்றுக்கொண்டமைக்கான நோக்கத்திலிருந்து விலகியதன் அடிப்படையில் அதிகாரச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன், அடிப்படை மாற்றமடைந்தன் காரணமாக வரி வீதம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பின்னலந்தவத்தை காணியில் 53 ஆம் இலக்க அளவிடைப் பத்திரத்தில் உள்ள 1 ஆம் 2 ஆம் காணித் துண்டுகளில் 16 ஏக்கர், 0 றூட், 22 பர்ச்சஸ் பரப்பளவில் யானைகள் சரணாலயமொன்றை பயன்படுத்தப்படுவதற்கெனத் தேசிய வனவிலங்கியல் திணைக்களத்திற்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி தற்காலிகமாகத் தீர்மானிக்கப்பட்ட குத்தகைக் தொகையொன்றினை அறவிட்டு 1974 ஆம் ஆண்டு தொடக்கம் ரம்புக்கனை உப அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட இக் காணி 2008 திசெம்பர் 18 ஆந் திகதிய 587 ஆம் ஆணைக்குழுத் தொடர்பான 6751 ஆம் இலக்க ஆணைக்குழுப் பத்திரத்தின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கமைய 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 30 ஆண்டு காலத்திற்குக் குத்தகையாக வழங்கப்படுவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டிருந்தபோதும், அதற்குரிய ஒப்படைத்தல் உரித்துறுதியோ அல்லது குத்தகை உடன்படிக்கையோ எதுவுமே தயரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1974 முதல் 2014 திசெம்பர் 31 வரை புதிய மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகை வரி நிலுவையாகவிருந்த தொகை ரூபா 6,178,731 ஆகும்.

ஒப்படைப்பதற்கான உரித்துறுதி அல்லது குத்தகை உடன்படிக்கை இல்லாததன் காரணமாக அந்நிலுவை மீதியை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது.

இதன்போது விலங்கியல் பூங்கா அரச நிறுவனமொன்று ஆகையால் குத்தகை அடிப்படையில் வழங்குவதானது சட்டபூர்வமானதல்ல எனவும் இது வரை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டபோதும், பணம் செலுத்தப்படாமையால் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு ஆணைக்குழுவிற்கு இழப்பீட்டைப் பெற்றுத் தரும் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தலைவர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

(இ) கேகாலையில் உள்ள பின்னவலவத்தையில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு 02 றூட் காணி ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், அதற்குரிய சட்டபூர்வ ஆவணங்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

நுவரெலியா, மாவட்ட வேவெல்ல தலாவலத்தைக் காணியில் 23 ஏக்கர், 03 றூட், 15 பர்ச்சஸ் பரப்பளவான காணி 2004 மார்ச் 18 ஆந் திகதி முதல் கணக்காய்வுத் தினமான 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலவிலவத்தையின் 09 ஆம் இலக்கக் காணித் துண்டு ஹோட்டல் கம்பனியொன்றினால் பயன்படுத்தப்பட்டு வருவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நேரடிப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டில் பேருவளை நகர அபிவிருத்தித் திட்டத்தை அமுலாக்குவதற்கு முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் மற்றும் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் இருவரும் ஒன்றிணைந்து அமைச்சரவைக் குறிப்பு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர். அதில் ஹோட்டல் செயற்திட்டம் ஒன்றும் உள்ளடக்கப்பட்டிருந்ததால் அதனை அமுல்படுத்துவதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி இலங்கை முதலீட்டுச் சபையும் தனியார் குத்தகைக் கம்பனி ஒன்றும் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தனர்.

(ii) தனியார் குத்தகைக் கம்பனி காணியைச் சுவீகரிக்கும் சந்தர்ப்பத்தில் தனியார் ஹோட்டல் கம்பனியொன்று 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அத்துமீறிய விதத்தில் ஹோட்டல் ஒன்றை அங்கு நடாத்திச் சென்றிருந்த போதிலும், அதற்கெதிராக ஆணைக்குழுவினால் எதுவித சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனியார் கம்பனிக்கு லேலண்ட்வத்தையில் உள்ள கைத்தொழில் பேட்டையில் 06 ஏக்கர் காணி 50 ஆண்டுகாலக் குத்தகைக்கு 2005 செப்டம்பர் 09 முதல் வழங்கப்பட்டமை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2012 மார்ச் 28 ஆந் திகதிய 7931 ஆம் இலக்க ஆணைக்குழுப் பத்திரத்தின் பிரகாரம், 5 ஆண்டுகளுக்கொரு முறை குத்தகை திருத்தப்பட்டு குத்தகை வருவாய் சேகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இக்கம்பனியின் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு முன்னர் தீர்மானித்த தொகைக்கு 50 சதவீதம் சேர்க்கப்பட்டு குத்தகை நிர்ணயிக்கப்பட்ட போதிலும் அத்தொகையை செலுத்துவதற்கு கம்பனி இணங்கவில்லை.

(ii) நிறுவனத்தின் 2005/07 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு தாமதிக்கப்படுமிடத்து 10 சதவீதத் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெற்றிராததுடன் அதன் காரணமாக இழப்பிற்குள்ளான தொகை ரூபா 960,000 ஆகும்.

(ii) ஆணைக்குழுவினால் விவசாய காணிகளைக் குத்தகைக்கு வழங்கும்போது மதிப்பீட்டுப் பெறுமதியில் 4 சதவீதமும், கைத்தொழில் பிரிவினால் 6 சதவீதமும் என அறவிடுதல் ஆணைக்குழுவின் சாதாரண நடைமுறையெனினும், கைத்தொழில் பிரிவுக்குரிய இந்நிறுவனத்திலிருந்து 4 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 8,000,000 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(இ) மாதம்பே மாவட்ட காணி அதிகார பிரதேசத்திற்குரிய தவுல்குறுந்துவத்தை காணியில் நடைபெறும் தெங்குச் செய்கையில் மீளாய்வாண்டின்போது ரூபா 306,850 வருமானம் பெறப்பட்டிருந்தது. எனினும், காவலாளியின் படி மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 445,397 கூட்டுத் தொகை வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 138,547 நட்டம் ஏற்பட்டிருந்தது. இதற்கமைய, ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படும் இவ்வாறான காணிகளை மேலும் அபிவிருத்தி செய்து வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

ஆணைக்குழுவின் பணிப்பாளர் (நிதி) பதவி 7 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக இருந்ததுடன் பணிப்பாளர் (சட்டம்) மற்றும் பணிப்பாளர் (காணி) எனும் பதவிகளும் 2 ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தன. இவ்வெற்றிடங்களுக்குப் பதில் கடமையாற்றல் அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் காரணமாக, நிறுவனம் தீர்மானங்களை மேற்கொள்வதில் தலையீடுகள் எதிர்நோக்கக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2015-2019 காலப்பகுதிக்குத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் கடந்த 3 ஆண்டுகளுக்கான செயற்பாட்டுப் பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதி கூடிய எல்லையை விஞ்சிய காணிகளைப் புலப்படுத்துதல், விஹார தேவாலகம அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் காணிகளை விடுவித்தலுக்காக அவற்றை இனங்காணுதல், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளைப் பதிவு செய்தல் மற்றும் உரித்தையும் ஆவணங்களையும் பதிவு செய்தல், பிரதான களஞ்சியத்தை முறையாக ஒழுங்குபடுத்தல், பிரதான களஞ்சியத்தைக் கணனிமயப்படுத்தல் மற்றும் காணி

விடயம் தொடர்பாக நாளாந்த நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 14 செயற்பாடுகளது இலக்குகளில் 50 சதவீதத்துக் குறைவான செயல் முன்னேற்றம் அடையப்பெற்றிருந்தது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமானப் பிரிவில் பேரேட்டைப் பேணுதல் மற்றும் குத்தகை நிலுவையை அறிவிடுதல், சட்டப் பிரிவில் நீதிமன்றவாரியாக வழக்குகளை இனங்காணுதல் மற்றும் செலவினம் தொடர்பான பரிசீலனைகள் தொடர்பில் மீளாய்வாண்டின்போது உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்காததுடன் அரையாண்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினது உள்ளவாறான மற்றும் பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் பரிசீலிக்கப்பட்டபோது வருமானத்தில் 34 முதல் 84 சதவீதமும் செலவினத்தில் 30 முதல் 6141 சதவீதமும் வரையிலான குறிப்பிடத்தக்க விலகல்கள் வெளிப்படுத்தப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5.6 வருடாந்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் வருடாந்த அறிக்கைகள் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

போலியான கொடுக்கல் வாங்கல்களாக இனங்காணப்பட்ட கணனி மென்பொருள் தொகுதியொன்றை கொள்வனவு செய்வதற்கு 2002 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 17,000,000 தொகை கணனிகளுக்கான முற்பணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், கணக்குகளில் முற்பணமாகக் குறிப்பிடப்படும் தவறான தொகையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் திறைசேரிக்கு அதனைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென 2015 ஜுன் 17 ஆந் திகதிய கணக்காய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. இக் கணக்கீட்டுக் குறிப்பைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2016 ஏப்ரல் 29 ஆந் தகிதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) கணக்கீடு | வருமானப்பிரிவு, காணி ஒப்படைப்புப் பிரிவு, செயற்திட்டப் பிரிவு அடங்கலாக ஏனைய சகல பிரிவுகளும் கணக்குப் பிரிவுடன் இணைப்பு செய்யப்படாமை |
| (ஆ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) வருமான நிலுவை தொடர்பான அறிக்கைகள் நாளதுவரையாக்கப்படாமை மற்றும் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | (ii) அரச நிறுவனம் ஒன்றிலிருந்து ஆணைக்குழு அறவிட வேண்டிய தொகை தொடர்பில் குறித்த பிரிவால் அறவிக்கப்படாமையால் கணக்கீடு செய்ய முடியாமை. |
| | (iii) அறவிடப்பட வேண்டிய குத்தகைப் பணம் தொடர்பாக காலப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிராமை. |
| | (iv) கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளாமை. |
| (இ) பதிவேடுகளைப் பேணாமை | காணிப் பதிவேடு மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகள், விற்பனை மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான பதிவேடுகள் இல்லாதிருத்தல். |
| (ஈ) காணிகளைக் குத்தகைக்கு வழங்குதல் | காணிகளைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாகக் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்காமை. |